புத்தகம்-௩. 1907ஆ மார்ச்சுமீ 1௨ இலக்கம் - ௩.

சுகாதார போதினி.

க - ம் பிரிவு.

வைத்தியக் குறிப்புகள்.

முன்தொடர்ச்சி (Vol-III. பக்கம் 9.)

இருமல்ரோகச் சிகிச்சை.

ஷ மாத்திரை.

மஞ்சட்கடுக்காய்த்தோல், தான்றிக்காய்த்தோல், கற்கடகசிங்கி, சிறுதேக்கு, அரிசித்திப்பிலி, படிக்காரம், வெண்காரம், கொடிவேலி வேர்ப்பட்டை, இந்துப்பு, மேற்றோல் சீவின சுக்கு, இவற்றுள் இடிக்க வேண்டியவைகளை யிடித்துச் சூரணித்து வஸ்திரகாயஞ் செய்து கொள்ளவேண்டும். இவை வகை-க-க்கு ப் பலம்-௨ (வெண்காரத்தைப் பொரித்துக் கொள்ள வேண்டும்.) கையாந்தகரைச் சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை:—உப்புகளை முன்னர் கல்வத்திலிட்டு நன்றாய்ப் பொடித்துக் கொள்ளவேண்டும். பிறகு மற்ற சூரணங்களையுஞ் சேர்த்து மேற்படி கையாந்தகரைச் சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து நான்குசாமமரைத்து எட்டுக் குன்றிமணி யெடையுள்ள மாத்திரைகளாகச் செய்து நிழலிலுலர்த்தி வைத்துக்கொள்ளவேண்டும்.

பிரமாணம்:—மாத்திரை-க வீதம் காலைமாலை யிரண்டுவேளையும் உபயோகிக்க வேண்டியது.

அநுபானம்:—சூடான தேகிகளுக்கு அதிமதுரக் கஷாயம், மிளகுக் கஷாயம் ஆகியவைகளில் உபயோகிக்க வேண்டியது.

உபயோகம்:—பீனிச சம்பந்தமான இருமல், கபசம்பந்தமான இருமல், கபக்கட்டு, கோழைக்கட்டு, தொண்டைக்கட்டு முதலிய ரோகங்கள் தீரும்.

பத்தியம்:—தேக சுபாவத்திற்குத் தகுந்தபடி யேற்படுத்திக் கொள்ளவும்.

இருமல்ரோகக் காரர்களுக்கு எண்ணெயை ஆசன வாயில் தடவி வைத்தால் உடனே இருமல் சாந்தமாகும்.

அரிசித்திப்பிலியை சுடாகு குடிப்பதுபோல சுங்கானில் வைத்துப் புகைக் குடித்து வந்தால், காட்பட்ட இருமல் ரோகம் குணமாகும்.

எட்டிக் கொட்டையை நெய்யில் வறுத்துக் கரியாக்கித் தூள்செய்து வைத்துக்கொண்டு இரண்டு குன்றிமணி யெடை தேனில் அல்லது, நெய்யில் மர்த்தித்துச் சாப்பிட வேண்டும். இவ்விதம் காலைமாலை யிரண்டுவேளையும் உபயோகித்துவர எல்லாவகை யிருமல்களுந் தீரும்.

இருமற் சூரணம்.

இந்துப்பு, வளையலுப்பு, கல்லுப்பு, படிக்காரம், வெண்காரம், ஓமம் இவை வகை-க-க்குப் பலம்-க, கருவேலம் பிசின் சூரணம் செல்லத்தக்க அளவு.

செய்முறை:—எல்லாவற்றையும் ஒன்றாகச்சேர்த்துப் பொடித்து ஒரு ஓட்டிலிட்டு மேலோடுமூடி மூன்று சீலைமண்செய்து அரைக் கெஜபுடம் இட்டு ஆறினபின்னெடுத்துக் கல்வத்திற்பொடித்து அதன் சமனெடை மேற்படி கருவேலம்பிசின் சூரணத்தைச் சேர்த்து வைத்துக்கொள்ளவும்.

பிரமாணம்:—குன்றிமணியெடை-எ-அ, காலைமாலை யிரண்டுவேளையும் உபயோகிக்கவேண்டும்.

உபயோகம்:—எல்லாவகை இருமல்களும்தீரும்.

இருமற்பாயசம்.

கோதுமை உமி படி-௰, இதனை-க,ஆழாக்குஜலத்தில் ஒரு இரவு ஊறவைத்து மறுநாட் காலையில் நன்றாய்ப்பிசைந்து வடிகட்டிப் பாலை யெடுத்துக்கொள்ள வேண்டும். மேற்றோல் நீக்கின வாதுமைப்பருப்பு, ஜீரணசக்திக்குத் தகுந்தபடி இரண்டு பருப்புமுதல் பதினொன்று பருப்பு வரையிலாம். இதனை அம்மியில் வைத்து மைபோலரைத்து ஜலத்திற் கரைத்து வடிகட்டிப் பாலெடுத்துக் கொள்ளவேண்டும். இம்மூவகைப் பால்களையும் ஒன்றாகச் சேர்த்து அடுப்பேற்றிக் காய்ச்சிக் கொஞ்சம் குழம்பான பதத்தில் அவரவர்களினிஷ்டப்படி சீனிச் சர்க்கரையை அல்லது, கற்கண்டைச் சேர்த்துப் பிறகு கொஞ்சம் காய்ச்சிப் பாயச பதத்திலிறக்கி வைத்து இளஞ்சூட்டுடன் ஜீரணசக்திக்குத் தகுந்ததுபோல் பானஞ்செய்யவேண்டும். இவ்விதம் பிரதிதினமும் இரண்டு, அல்லது, மூன்றுதடவை பானஞ்செய்து வரலாம். இப்படிச் செய்துவந்தால் இருமல் சாந்தப்படுவதுடன் இருமலினுலுண்டாகும் தூர்ப்பலம், ஆபாசம், களைப்பு முதலியவை

கள் தீரும். இருமல் தேகிகளுக்கு இதனை ஆகாரமாகச் செய்து உபயோகித்து வரலாம்.

சிறுபிள்ளை யிருமலுக்கு.

வெண்காரம் பலம்-௧, இதில் அரைப்பலத்தையெடுத்துப் பொரித்துக் கொள்ளவேண்டும். அரைப்பலத்தைப் பொரிக்காமற் சேர்த்து இரண்டையும் பொடித்து இவ்விரண்டிற்குச் சமனெடை மிளகுத்தூளைக் சேர்த்து சோற்றுக் கற்றாழைச் சாற்றைச் சிறுகச் சிறுகவிட்டு ஒரு சாமமரைத்து ஒருகுன்றிமணி யெடை மாத்திரைகளாகச் செய்து நிழலில் உலர்த்தி வைத்துக் கொள்ளவேண்டும்.

பிரமாணம்:—மாத்திரை-௧-௨-பிள்ளையின் வயதிற்குத் தகுந்தபடி யுபயோகிக்கவேண்டும்.

அனுபானம்:—மூலைப்பால், தேன் ஆகியவைகளாம்.

உபயோகம்:—குழந்தைகளுக்குக் காணும் எல்லாவகை யிருமல்களும் தீரும். சுகுமார தேகிகளுக்குக் காணும் இருமல்களிலும் உபயோகிக்கலாம்.

காக்கையின் மலத்தை ஒரு சிறு பையிற் போட்டு முடிந்து சிறு பிள்ளைகள் கழுத்திற் கட்டி தொங்கவிட்டு வைத்தால் இருமல் ரோகஞ் சாந்தமாகுமென ரியாஜே ஆலம் கிரீ யென்னுங் கிரந்தத்திற் சொல்லப்பட்டிருக்கின்றது.

இன்னும் வரும்.

சுகாதார போதினி.

௨-ம் பிரிவு.

குடும்ப வைத்தியம்.

முன்தொடர்ச்சி (Vol - III - பக்கம் 10.)

கீழ்க்காணும் முறையானது பேதியாகக் கொடுக்க உபயோகப் படுகிறது. இதற்கு வெள்ளைப் பாவன திராவகம். (White Mixture) வைட் மிக்சர் எனச் சொல்லப்படுகிறது.

சீமை யிந்துப்பு விராகனெடை	௧௨
காந்தமண் பற்பம் விராகனெடை	௨
இஞ்சி ஷர்பத் விராகனெடை	௮
பெப்ரமெண்டு ஜலம் பலம்	௫

செய்முறை:—இவை யெல்லாவற்றையும் ஒன்றாய் மிஸ்ரமித்து வைத்துக் கொண்டு நான்குமணிக்கொருதடவை முக்காற் பலம் பானஞ்செய்ய வேண்டும். நன்றாய்ப் பேதியாகிற வரையில் இதைப் பானஞ் செய்யவும். பானஞ் செய்யும்போது இதனை நன்றாய்க் குலுக்கி மருந்தை யெடுத்துக் கொள்ளவேண்டும். ஏனெனில், அந்த மருந்து கீழ்ப்படிந்திருப்பதுவே காரணமாம்.

வேறு.

சீமை யிந்துப்பு விராகனெடை ௨. ௪.

* சூரத்துநில ஆவாரைக் கஷாயம் பலம் - ௩. அல்லது ௫.

செய்முறை:—இவ்விரண்டையு மிஸ்ரமித்துப் பானஞ் செய்வித்தால் நன்றாய்ப் பேதியாகும். ஆசன எரிச்சல், களைப்பு முதலியவைகள் ஒன்று மிராது.

இந்தக் கஷாயத்துடன் மேற்கண்டபடி சீமையிந்துப்பைச் சேர்த்த முறைக்கு கருப்புபாவன திராவகம் (Black Mixture) பிளாக் மிக்சர்எனச்சொல்லப்படும்.

இன்னும் வரும்.

சுகாதார போதினி.

௩-ம் பிரிவு.

ஸ்திரீ வைத்தியம்.

முன்தொடர்ச்சி (Vol. -III-பக்கம்-11.)

சிசுவானது மார்புவரையில் வெளிப்பட்டால் முதுகில் வைத்திருக்கிற கையை யெடுத்து விடவேண்டும். ஆனால் வயிற்றின்மேல் வைத்திருக்கிற கையை யெடுக்கலாகாது. நஞ்சுக்கொடி வெளிப்படுகிற வரையில் கையை வயிற்றின் மீதே வைத்துக்கொண்டிருக்கவேண்டும். அப்படிச் செய்வதால் அனுவசியமான

---

* சூரத்து நிலஆவாரைக் கஷாயம்:—குச்சி, காம்பு முதலியவைகளை ஆய்ந்து நீக்கின சூரத்து நிலஆவாரை விராகனெடை-௬, மேற்றோல் சீவி யிடித்த சுக்குத் தூள் குன்றிமணி யெடை - ௧௪, கொதிக்கின்ற வெந்நீர் பலம்-௮, இந்த வெந்நீரை ஒரு பாத்திரத்திற் போட்டு மேற்படி யிரண்டு சரக்கையும் அதிற் போட்டு அரைமணி நேரமூடி வைத்திருந்து வடிகட்டித் திப்பிநீக்கின கஷாயமே சூரத்து நில ஆவாரைக் கஷாயமாம். இந்தக் கஷாயத்தில் ஒன்றரைப் பலமுதல் மூன்று பலம் வரையிற் பானஞ் செய்யலாம்.

இரத்த சிராவகத்திற் கேதுவிராது. பிள்ளைமார்புவரையினுதயமாகி விட்டால் பிள்ளை ஜனனமாவதற்குத் தடையிராது. சில நிமிஷங்களுக்குள் ஜனனமாகிவிடுமென நிச்சயிக்க வேண்டியது. பிள்ளைபிறந்த தக்ஷணமே அதிக மெதுவாகப் பிள்ளையைத் தூக்கி ஒரு பக்கமாக வைத்துவிடவேண்டும். ஏனெனில் சிலசமையங்களில் சில ஸ்திரீகளுக்குப் பிள்ளை பிறந்தவுடனே கெற்பப்பையிலிருந்து இரத்த தாரை வெளிப்படும். அதனால் பிள்ளையின் முகம், காது, மூக்கு, கண் முதலிய விடங்களில் அந்த இரத்தமானது செல்ல ஏதுவாகுமென்பதே காரணம்.

பிள்ளை பிறந்தவுடனே மேற்கண்டபடி ஒதுக்கமாக ஒரு பக்கத்தில் வைத்துக் கொண்டு பிள்ளையின் வாயில் விரலைவிட்டு வாய்க்குள்ளிருக்கும்சளி முதலிய அசுத்தங்களை நீக்கிவிடவேண்டும். இவ்விதம் அசுத்தங்களை நீக்கினபின்பு நஞ்சுக் கொடியை அறுக்கவேண்டும்.

அதன்விபரம்:—நாபியின் பக்கமாக மூன்றுவிரல் நீளம்விட்டு மிருதுவான துணியினுல் ஒருமுடிபோடவேண்டும். (கெட்டியான் கயிறு முதலியவைகளாற் கட்டினுல் அது அறுந்துபோவதற்கு ஏதுவாகும்.) இதற்குமேல் அரையங்குலம்விட்டு வேறொரு முடிச்சுப் போடவேண்டும். இந்த இரண்டு முடிச்சுகளுக்கு மத்தியில் கூர்மையான கைத்திரிக்கோலால் இலகுவாய்க்கத்தரித்து விடவேண்டும். அதை மழுங்கக்கத்தியால் பலதடவை யறுப்பதினுற் சிசுவிற்குக் கஷ்டமுண்டாகும். இவ்விடத்தில் பின்காணும் விஷயத்தைக் கவனித்தில் வைக்கவேண்டியது ஆவசியகம் அதாவது, சிசு பிறந்தபின்பு அது அழாமலிருந்தால் நஞ்சுக் கொடியை அறுக்கலாகாது என்பதே. பிள்ளை அழாமலிருப்பதின் கருத்தாவது இன்னும் அது மூச்சு வாங்கவில்லை. இன்னும் அது தாயினுடைய இரத்தத்தின் மூலமாகவே ஜீவித்துக் கொண் டிருக்கின்றது என்பதாம். இந்தச் சமையத்தில் நஞ்சுக் கொடி யறுபட்டால் பிள்ளைக்கு மரணமே கெதியாகும்.

பிள்ளையின் வாயிலிருந்து கோழை முதலிய அசுத்தங்களை நீக்கினபின்பு அது அழாமலிருந்தால் கொஞ்சம் குளிர்ந்த ஜலத்தைக் கையிலெடுத்து முகத்தில் இரண்டொரு தடவை தெளித்தால் அது யேங்கி அழ ஆரம்பிக்கும். இப்படிச் செய்தும் குழந்தை அழாவிட்டால் ஒருசிறு பாத்திரத்திற் குளிர்ந்த ஜலத்தை நிறைத்துப் பிள்ளையைக் கழுத்துவரை அதில் நனைத்து உடனே அதை மெதுவாக எடுத்துக் கொள்ளவேண்டும். இப்படிச் செய்வதால் பிள்ளையானது திடுக்கிட்டு ஏங்கி அழ ஆரம்பிக்கும். இப்படிச் செய்தும் அது அழாவிட்டால் சிதோஷ்ணமான ஜலத்தில் அதாவது இளஞ்சூடான ஜலத்தில் முன்போற் கழுத்துவரை நனைத்து உடனே மெதுவாக எடுத்துக் கொள்ளவேண்டும். இவ்விதம் சிதோஷ்ண ஜலத்தில் ஒருதடவையும் குளிர்ந்த ஜலத்தில் ஒருதடவையுமாக மாற்றி மாற்றிப் பிள்ளை அழுகிறவரை இரண்டு மூன்று தடவைசெய்யவேண்டும்.

பிள்ளையின் முதுகில் கையால் மெதுவாகத் தட்டிக் கொடுப்பதினுலும், மூக்கில் இறகு முதலியமிருதுவாகிய வஸ்துக்களை மூக்கில் விட்டுக் கூச்சமுண்டாக்குவதினுலும் சிலசமையம் பிரயோசனங் காணப்பட்டிருக்கிறது. தெய்வாதீனமாக இந்தச் சிகிச்சைகளினுல் அழாவிட்டால் பிள்ளையை தன்காலை நீட்டிக் கொண்டு அதன்மேல் மல்லாத்திப் படுக்கவைத்து தன் இரண்டுகைகளையும் அதன் இரண்டு அக்குளுக்குள் செலுத்திக் கொஞ்சம் தூக்கிப்பிடித்து அதன்வாயில் ஊத வேண்டியது. ஊதினவுடனே அதன்புயத்தை அதன்விலாவோடு சேர்த்து அழுத்த வேண்டியது. பிறகு முன்போற் கொஞ்சந் தூக்கி அதன்வாயில் ஊதவேண்டியது. பிறகு முன்போல் புயத்தைவிலாவோடு அழுத்திக் கொஞ்சம் அமுக்கிப் பிடிக்க வேண்டியது. இவ்விதம் மாற்றி மாற்றிச் சிலதடவைகள் செய்தால் கடவுளினது கிருபையால் பிள்ளையானது இரண்டு மூன்று தடவை யேங்கி யேங்கிச் சுவாசித்து அழ ஆரம்பிக்கும்.

இன்னும் வரும்.

சுகாதார போதினி.

ச - ம் பிரிவு.

பாலவைத்தியம்.

முன்தொடர்ச்சி (Vol. III. பக்கம் - 12.)

சுரமாந்தம்.

இலக்ஷணம்:—தேகம், முகம். ஆகியவை மினுமினுத்திருத்தல், சுரமிருத்தல், முலையை வாயில் வைத்தூட்டினும்கொஞ்சங் கொஞ்ச முண்ணுதல், நீர் சிவந்திருத்தல், அடிக்கடி அழுகை, பொடியிருமல், மல

ஜலக் கட்டு, பசியில்லாமை, தேகமெல்லா நோவா யிருத்தல், மயக்கம் முதலியவைகளாம்.

சிகிச்சை.

தும்பையிலை, உத்தாமணியிலை, துளசியிலை வெதுப்படக்கி யிலை, நாயுருவியிலை, சாணக்கியிலை, பேய்மிரட்டியிலை, விஷ்ணுகரந்தையிலை இவை வகை-க்-க்கு விராகனெடை-க. இவை யெல்லாவற்றையும் இடித்துச் சாறுபிழிந்து ஓட்டைச் சற்று காயவைத்து அதிற் போட்டு முரித்து ஒரு குன்றிமணி யெடை ஆமையோட்டுப் பற்பத்தை மிஸ்ரமித்துப் பானஞ்செய்விக்கவேண்டும். இவ்விதம் செய்வதால் மேற்கண்ட சுரமாந்த ரோகமானது தீரும்.

கல் மாந்தம்.

இலக்ஷணம்:—வயிறு கல்போ லிருத்தல், சுரமடித்தல், மெய் வெளுத்திருத்தல், நாவுலர்ந்திருத்தல், கால் குளிர்ந்திருத்தல், முகத்தை நெருடிக் கொள்ளுதல், பலவிதமாகக் கழிதல், உடல் மெலிந்துபோதல், சிரசில் வியர்வை முதலியவைகளாம்.

சிகிச்சை:—அரிசித்திப்பிலி, வசம்பு (இதனைச் சுட்டுச் சாம்பலாக்கிக் கொள்ள வேண்டும்) பேய் மிரட்டியிலை, நிலஆவாரையிலை, கடுகு ரோகணி, நாயுருவியிலை. இவை வகை-க-க்கு விராகனெடை-உ௯, வேப்பெண்ணெய் பலம் உ௯.

செய்முறை:—மேற்படி வகைகளில் இலைகளை யரைத்தும் மற்றச் சரக்குகளையிடித்துத் தூள்செய்தும் மேற்படி யெண்ணெயிற் போட்டுக் காய்ச்சி மெழுகு பதத்தி லிறக்கிக் கொள்ளவும். மேற்படி யிலைகளைத் தனித்தனி சாறு பிழிந்து மேற்கண்ட அளவு சேர்த்து எண்ணெ யெரித்துக் கொள்வது உத்தமமாயிருக்கும்.

பிரமாணம்:—விராகனெடை-க, இதில் ஒருகுன்றிமணி யெடை ஆமையோட்டுப் பற்பத்தை மிஸ்ரமித்துப் பிள்ளைக்குக் குடிப்பாட்ட வேண்டும். இவ்விதம் வியாதி குணப்படுகிற வரையிற் செய்துவர வேண்டும்.

உபயோகமும்.—கல்மாந்த முதலிய பல வகை மாந்தரோகங்கள் தீரும்.

வலிப்பு மாந்தம்.

இலக்ஷணம்:—கை கால்கள் அடிக்கடி யிழுத்தல், பல்கிட்டி யிருத்தல், பலவிதக் கழிச்சல், மார்பில் வலி, வாந்தி, மயக்கம், முதலியவைகளாம்.

சிகிச்சை:-மேற்றோல் சீவின சுக்கு, சன்னராஷ்டம், வெள்ளைப் பூண்டிதழ், மாவிலிங்கப் பட்டை, நல்ல வேளைவேர், முருங்கைப் பட்டை, முசுறு முட்டை, இவை வகை-க-க்கு விராகனெடை - உ௯, வேப்பெண்ணெய் பலம்-உ௯.

செய்முறை:-மேற்படிச் சரக்குகளை மைபோலரைத்து எண்ணெயிற் கலக்கிப் பூதமாகக் காய்ச்சி யிறக்கிக் கொள்ளவும்.

பிரமாணம்:-விராகனெடை-க, க௯, இதில் வேளை ஒன்றுக்கு ஒரு குன்றிமணி யெடை கோரோசனையைப் பொடித்து மிஸ்ரமித்துக்கொடுக்கவேண்டும். வெள்ளைப் பூண்டுத் தைலத்தைத் தேகத்தின் மேற்பூசிவர வேண்டும்.

உபயோகம்:--வலிப்பு மாந்தம் முதலிய பாந்த ரோகங்கள் தீரும்.

(இன்னும் வரும்.)

சுகாதார போதினி.

௫-ம் பிரிவு.

மூலரோகம்.

முன்தொடர்ச்சி (Vol-III-பக்கம்-12)

மூலரோகக் களிம்பு

ஜாதிக்காய்ச் சூரணம் விராகனெடை - க௯, மாசக்காய்ச் சத்து விராகனெடை-௩, சுத்திசெய்த ஆட்டுக் கொழுப்பு விராகனெடை-எ௯.

செய்முறை:—இவை யெல்லாவற்றையும் ஒன்றாய்ச் சேர்த்துக் கல்வத்திலரைத்து, மெழுகுபோலானபின் பீங்கான் பாத்திரத்திற் பத்திரப் படுத்தவும்.

உபயோகம்:— இதனை மூல முளைகளின் மீது தடவி வருவதினால் மூல முளை கரைந்து மறைந்துபோம்.

வேறு.

வெடியுப்புத் தூள் விராகனெடை-வ, வெள்ளாட்டுப்பால் பலம்-௫, சீனிச் சர்க்கரை பலம் - க, இவை யெல்லாவற்றையும் ஒன்றாய்க் கலந்து பானஞ்செய்யவேண்டும். இவ்விதம் காலை மாலை யிரண்டுவேளையும் உபயோகித்து வந்தால் இரத்தமூலம், சுட்கமூலம் ஆகியவைகள் தீரும்.

வேறு.

பச்சையான மாவிலையைக் கசக்கிச் சுங்கானில் வைத்து நெருப்பிட்டுச் சுங்கான் பிடிப்பதுபோல் புகைக் குடித்து வந்தால் இரத்தமூலங் குணமாகும்.

வேறு.

மாதுளை போட்டை உலர்த்திச் சூரணஞ் செய்து வைத்துக்கொள்ள வேண்டும். இதில் விராகனெடை-ஒ, விளாவின தயிருடன் சேர்த்துப்பானஞ்செய்யவேண்டும். விளாவின தயிரானது சுமார்-௫-பலமிருந்தாற் போதுமானது. இவ்விதம் காலை மாலை யிரண்டு வேளையும் உபயோகிக்க வேண்டியது. அப்படிச்செய்யக்கூடாவிட்டால் காலையில் ஒருவேளை மாத்திரஞ் செய்யக் வேண்டியது. தாகத்திற்கும் மேற்படி விளாவின தயிரையே பானஞ் செய்யவேண்டும். இவ்விதம் செய்து வருவதினல் இரத்தமூலம் குணமாகும்.

வேறு.

சட்டிப் பற்றுக்கரி (அதாவது சட்டியை அடுப்பில் வைத்தெரிக்கும்போது சட்டியின் பின்பக்கத்தில் ஒட்டியிருப்பதாம்) இதனைச் சுரண்டியெடுத்து வைத்துக்கொள்ள வேண்டும். இதில் வேளை ஒன்றிற்குக் கால் விராகனெடை வீதமாக இரண்டு மூன்று பலம் ஜலத்திற்போட்டுக் கரைத்துப் பானஞ்செய்ய வேண்டும். இவ்விதம் செய்துவருவதினல் இரத்தமூலம் தீரும்

வேறு

எட்டிக்கொட்டையைச்செங்கல்மீதுஜலம்வார்த்து அதில் இழைத்து மூலமுளைகளின்மீது பூசவேண்டும் பிரதிதினமும் மும்மூன்று தடவை பூசிவந்தால் மேற்படிமுளைகள் வதங்கிச்சுருங்கி உதிர்ந்துபோகும்.

இன்னும் வரும்.

சுாதார போதினி.

௬-ம் பிரிவு.

இரசம்.

முன்தொடர்ச்சி (vol - III பக்கம். 14)

ஹேம கிருபா ரசம்.

சுத்திசெய்த இரசம் ஒருபங்கு, தங்கத்தை அராவின அரபொடி காற்பங்கு, சுத்திசெய்த கெந்தகம் இரண்டரைப்பங்கு, முள்ளிலவ மரப்பட்டைச் சாறு செல்லத்தக்க அளவு. இம்மூன்றையுங் கல்வத்திலிட்டு மேற்படி சாற்றைச் சிறுகச் சிறுகவிட்டு இரண்டு சாம மரைத்து ஒரு உருண்டையாகச் செய்து மண்ணோட்டில் வைத்து மேலோடு மூடிச் சீலைமண் செய்து உலர்த்திக்கொள்ள வேண்டும். ஒருமுழச் சதுரக் குழிதோண்டி அதன் மத்தியில் அரைச்சாண்சதுரம் பள்ளந்தோண்டி அதில் முன் சித்தப்படுத்தி வைத்திருக்கிற கவசத்தைவைத்து அச்சிறுகுழி நிறைய மணலைப்போட்டமுத்தி விடவேண்டும். பிறகு அந்தக்குழி நிறைய விராட்டியை அடுக்கி நெருப்பிட்டுக் குளிர ஆறினபின் எடுத்து அறுகண்ட எடை கெந்தகம்சேர்த்து இஞ்சிரசத்தைச் சிறுகச் சிறுகவிட்டு இரண்டு சாமம் அரைக்கவேண்டும். பிறகு கொடிவேலிவேர்க்கஷாயத்தைவிட்டு இரண்டுசாமம் அரைக்கவேண்டும். பிறகு பருமனை பலகரைகளைபெடுத்து அதற்குள் நிறைத்துவிட வேண்டும். பிறகு மருந்தினெடையில் அரைக்காற்பங்கு வெண்காரம் வெண்காரத்தினெடையிற்பாதி நாபிச்சூரணம், இவ்விரண்டையுங் கல்வத்திலிட்டுக் கள்ளிப்பாலைவிட்டு ஒருமணிநேரமரைத்துப் பலகரையின்வாயில் தடவி வாய்பந்தனஞ் செய்ய வேண்டியது. பிறகு ஒரு பானைக்குள் சுண்ணம்பைத்தடவி அதற்குள் முன் சித்தப்படுத்தின பலகரைகளைவைத்து அந்தப் பானையின் வாய்க்குப் பொருந்தும்படியான மற்றொரு பானையைத் தேப்த்துப் பொருந்தும்படி மூடி ஏழு சீலைமண்செய்து உலர்த்திக் கெஜபுடம் போடவேண்டும். நன்றாய்க் குளிர ஆறினபின் எல்லாவற்றையும் எடுத்துப் பொடித்துச் சீஷாவிற் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—ஒரு குன்றிமணிமுதல் இரண்டு குன்றியணியெடை வரையிலாம்.

அனுபானமும், உபயோகமும்:—இலந்தைக்கொட்டைச் சூரணம், அரிசித்திப்பிலிச் சூரணம், மயிலிறகைச் சுட்ட சாம்பல் இவை வகை-௧-க்குக் குன்றிமணியெடை-௪, கற்கண்டுத்தூள் குன்றிமணியெடை-௮, தேன் விராகனெடை-௧, இவையெல்லாவற்றையும் ஒன்றுப் மிஸ்ரமித்து மேற்கண்ட பற்பத்தைப் பிரமாணப்படி யனுபானித்துண்ண எல்லாவகைக் கபரோகங்களும், கபதொந்த ரோகங்களும் தீரும்.

இன்னும் சங்கிரஹணி, இருமல், சுவாசகாசம், மந்தாரகாசம், அரோசிகம், பலஹீனம் முதலியரோகங்களும் தீரும்.

பத்தியம்:—இதற்கு உப்பை நீக்கவேண்டியது. கூடாதசமையத்தில் குறைந்தபக்ஷம் மூன்று நாளாயினும் உப்பை நீக்கிவைக்க வேண்டியது.

இன்னும் வரும்.

சுகாதார போதினி.

௭-ம் பிரிவு.

பற்பமுறைகள்.

முன்தொடர்ச்சி (Vol-III. பக்கம். 14.)

நாம் இந்தப் பிரிவில் இதுவரையில் தங்கப், வெள்ளி முதலியவைகளில் பல பற்பவகைகளை யெழுதிவந்தோம். அவை சம்பந்தமான முறைகள் இன்னும் அனேகமுள. இன்னும் அவற்றுள் அருமையான முறைகளுமுண்டு. கடவுள் கிருபைசெய்தால் அனுபோகவைத்திய ரத்நாகரத்தில் எழுதுவோம். நமது அனுபோகவைத்திய நவநீதத்திலும் அநேகமுறைகள் எழுதப்பட்டிருக்கின்றன. ஆகையால், அம்முறைகளை யிம்மட்டோடு நிறுத்தி இனித் தாம்பிரபற்பமுறைகளை யெழுதுவாம்.

பற்பத்திற்கு வேண்டிய தாம்பிரமானது நைப்புள்ளதாகவும், கனமானதாகவும், சிவந்த வருணமுள்ளதாகவும் இருக்கவேண்டும். இவ்வகைத் தாம்பிரத்தைச் சுத்திசெய்து பற்பஞ்செய்ய வேண்டும். இதன் சுத்திக்கிரமம் அநேகவகையாயினும் இலகுவான இரண்டொரு சுத்தி முறைகளைமட்டும் இங்கெழுதுவோம்.

தாம்பிரச்சுத்தி.

தேவையான அளவு தாம்பிரத்தை மெல்லியதகடாகச்செய்து கொள்ளவேண்டும். அதைக் கரிநெருப்பில்வைத்துப் பழுக்கக்காய்ச்சி எள்ளெண்ணெயில் தோய்க்கவேண்டும். இந்த எண்ணெயானது தோய்த்த தகடானது ஆழ்ந்து கிடக்கும்படியாக இருக்கவேண்டும். ஒருதடவை தோய்த்த எண்ணெயை மறுதடவைக்கு உபயோகிக்கலாகாது. தடவைக்குத் தடவை புதிதாக வார்த்துக்கொள்ள வேண்டும். முன் தோய்த்த தகடானது ஆறினபின் முன்போல் நெருப்பில்வைத்துப் பழுக்கக்காய்ச்சி முன்போல் தோய்க்கவேண்டும். இவ்விதம் மடக்கிமடக்கி எண்ணெயில் ஏழுதடவையும், புளித்தமோரில் ஏழுதடவையும், காடியில் ஏழுதடவையும், கோமூத்திரத்தில் ஏழுதடவையும், கொள்ளுக்கஷாயத்தில் ஏழுதடவையும் முன்போல் தோய்த்துக்கொள்ள வேண்டும். இவ்விதம் செய்தெடுத்த தாம்பிரமானது பற்பம்செய்ய யோக்கியதையான சுத்தியுள்ளதாம்.

(இன்னும் வரும்)

விளம்பரம்.

இலக்க சௌமிய சாகரம் தெளிபொருள்

விளக்கவுரை முதற்காண்டம்,

ஷை இரண்டாங் காண்டம்.

மேற்படி இரண்டு காண்டங்களும் அச்சாகி விற்பனைக்குச் சித்தமா யிருக்கின்றன. இந்த (இலக்க சௌமிய சாகர) மென்னும் அரிய நூலானது அகஸ்திய மகா முனிவராற் செய்யப்பட்டதென்பதும் மகா சிறப்புற்றதென்பதும் உலகரிந்தவிஷயம். இந்நூல் இதுவரையில் உரையுடன் வெளிப்படவில்லையென்பது நிச்சயம். இதில் வாதம், வைத்தியம், மாந்திரீகம், ஞானமுதலிய விஷயங்கள் மிகவுந் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. இதிலுள்ள பாக்களெல்லாம் சித்திரகவிக் கிரமமாகவும் ஆழ்ந்த பொருட்களை யகத்துள்ளடக்கின வைகளாவும், பிரித்தாலோ உன்னத முறைப்பொருத்தமாகவும், பொருள்களை இலகுவிற் றெரிந்துகொள்ளும் விதமாயும் அமைக்கப் பெற்றிருக்கின்றன. இது பத்துக் காண்டங்களுள்ளது. இதிலுள்ள முறைகளெல்லாம் நிச்சயமாகக் கைகூடத் தக்கவைகளும், சந்தேகமற்றவைகளும், பல ஆச்சரியமான வேலைகளைச்செய்யத் தக்கவைகளுமாம். வாதம், வைத்தியம், மாந்திரீகம், ஞா

ன முதலியவைகளை விரும்பும் ஒவ்வொருவருக்கும் இந்த நூல் ஒன்றே போதுமானது. இந்த நூலின் பெருமை இதனை வாங்கிப்பார்த்து இதிலுள்ள முறைகளைச்செய்து கையாண்டால்மட்டுந் தெரியுமேதவிர மற்றவர்களுக்குக் கிஞ்சித்தும் புலப்படாது. இதனைப் படிக்கப் படிக்க அளவற்ற ஆச்சரியத்தையும், ஊக்கத்தையும் அதிகரிக்கச் செய்து வருமே தவிர ஒரு சிறிதும் வெறுப்பிற் கிடந்தராது.

இது மற்ற சித்தர் நூற்களைப்போல எடுத்ததெல்லாம்எண்ணிலாச் சந்தேகமாயும், பார்ப்பவையெல்லாம் பரம ரகசியமாயும், ஒரிடத்திலெடுத்த விஷயம் மற்றோரிடத்தில் முடிவு பெற்றதாயும், ஒரு நூலிற் சொல்லிய முறைக்கு வேறோர் நூலில் மர்மங்கண்டு பிடிக்கவேண்டிய தாயுமுள்ள பலவித மயக்கங்களுக்கு எதுவானதல்ல இதன் பாக்களின் அருத்தங்களை மட்டும் உணர்ந்துகொண்டால் மற்ற எவ்விஷயங்களிலும் எத்தகைய சந்தேகங்களும் ஏற்படாது. இதிற் சொல்லப்பட்ட முறைகள் சம்மந்தமான ஒவ்வொரு சரக்குகளின் பிறப்பிடம், ரூபம், இலக்ஷணம், குணம் பெயர் முதலியவைகள் அநேகவித ஹேதுக்களைக் கொண்டு தெளிவுபடுத்தப் பட்டிருக்கின்றன. இவ்விதமே ஒவ்வொரு விஷயமும் பலவிதத்தாலும் எவ்வித சந்தேகமும் வராமற் செவ்வனே விளக்கப்பட்டிருக்கின்றது. ஆகையால் இதிலுள்ள முறைகளைமட்டும் தெரிந்து செய்துகொண்டால் உலகத்தில் எவ்விஷயத்தையும் சாதிக்கலாமென்ற நம்பிக்கை யிருப்பதினாலேயே அநேக முறைகளைச்சொல்லி மனதை அங்குமிங்கு மலையச்செய்யாமல் இதன் பத்துக் காண்டங்களிலும் முக்கியமான சில முறைகளையே சொல்லியிருக்கின்றார். இன்னும் இதில் இரசவாத விஷயத்தை மற்ற நூற்களில் ஆகாத காரியத்தை ஆவதுபோற்காட்டி அதிலும் சந்தேகத்தைமூட்டி யிருப்பதுபோலல்லாது ஒவ்வொருவிஷயமும் மெய்பாகவும்,சந்தேகத்திற்கிடமின்றியும் அந்தந்தந்த அளவின் கிரமப்படியும் வெகு நுட்பமாகச் சொல்லப்பட் டிருக்கின்றது. இதன் அருமை பெருமைகளெல்லாம் இந்நூலை ஒருதடவை பார்த்தவுடன் அனுபவசாலிகளுக்கு நன்கு விளங்கும்.

இன்னும் இது வைத்தியர்களைத் தவிர மற்றய தமிழ்கற்கு மாணாக்கர்களுக்கும் பாடங்கேட்கவேண்டிய இன்றியமையாத ஓர் சிறந்த நூலாகும்.

இரசவாதம் வைத்திய முதலியவைகளை விரும்புகின்றவர்களுக்கு இந்த முறைகளைமட்டு முடித்துக் கொண்டாலேபோதுமானதுஇக்காண்டங்களுக்கு அரியபாக்களையெடுத்துக்கொண்டு முறைபிசகாது தெளிவான உரைஎழுதி யிருப்பதோடியாவரு மெளிதி லுணர்ந்துகொள்ளும் விதமாக அந்தந்தக்காண்டங்களின் கடோசியில் அவைகளி லடங்கியுள்ள முறைகளை வசனரூபமாகவு மெழுதப்பட் டிருக்கின்றது. இவைகள் ஒவ்வொருவர் கையிலும் அவசிய மிருக்கத் தக்கதே. தமிழ் விரும்புங் கனவான்களுக்கும் அவசியமானதே. லோகோபகாரத்தைக் கருதியே இவைகளுக்கு மிகவுங் குறைந்தவிலை யேற்படுத்தப் பட்டிருக்கின்றன.

மேற்படி - 2 - காண்டங்களும் ஒன்றாக பைண்டு செய்யப்பட் டிருக்கின்ற பிரதி-1-க்கு கைவிலை ரூபா 1 - 0 - 0, வி - பி - ரூபா 1 - 3 - 0.

☞ ஹக்கீம் - பா -முகம்மது அப்துல்லா.

சந்தா தாரர்களின் பெயர்.

கீழ்க்கண்ட கனதனவான்கள் நமது போதினியின் 1907 ௵ சந்தாவை நம்மீது பேரன்புடன் முன் பணமாக அனுப்பினதற்காக நாம் மனப் பூர்வமான வந்தனத்துடன் பெற்றுக் கொண்டோம்.

கனம். கிருஷ்ணசாமி ராஜா
வேட்டவளம். 2 ,, ,,

கனம். கிருஷ்ண சாமி நாயுடு
நாகப்பட்டணம். 2 ,, ,,

கனம். மாதவாச்சாரியார்
சிறேமல்குடி. 2 ,, ,,

கனம். P. விஸ்வாஸ், காடிகிஸ்ட்
சிலுவார் பட்டி. 2 ,, ,,

கனம். K. சாயபு மரைக்காயர்
கீர்வி. 2 ,, ,,

கனம். R. முத்து நரசிம்மலு நாயுடு
மேலப்புதுப் பாக்கம். 2 ,, ,,

கனம். S K. கந்தசாமி கவுண்டர்
ராமநாராயண புரம், 2 ,, ,,

கனம். முகம்மது காசிம் சாயபு
குண்ணத்தூர். 2 ,, ,,

கனம். K. தர்மராஜ அய்யர்
பார்வதி புரம். 2 ,, ,,

கனம். V. சுப்பய்ய காரு
கும்பகோணம். 2 ,, ,,

கனம். M. நாராயணசாமி அய்யர் B. A. B. L.
திருவல்லிக் கேணி. 2 ,, ,,

கனம். M. சுப்பிரமணிய அய்யர்
கோட்டப் பாடி. 2 ,, ,,

கனம். K. குப்புசாமி அய்யர் B. A. B. L.
திருவல்லிக் கேணி. 2 ,, ,,

கனம் ஞானசேகர முதலியார்
மதருஸ். 1 ,, ,,

கனம். A. L. M. முகம்மத் முகைதீன் அவர்கள்
கொழும்பு. 2 ,, ,,

கனம். J. S. பிச்சை முத்து
காரைக்கால். 2 ,, ,,

கனம். T. ஆறுமுக முதலியார்
திருவடீஸ்வரன் பேட்டை. 1 ,, ,,

கனம். E. அண்ணுசாமி முதலியார்
நாமக்கல். 2 ,, ,,

கனம். C. மாதவராவ்
தும்கூர். 2 ,, ,,

கனம். M. ரத்தினவேலு முதலியார்
மதருஸ். 2 ,, ,,

கனம். E. ராகவாசாரியார்
நெல்லூர். 2 ,, ,,

கனம். M, கந்தசாமி பிள்ளை
பழனி. 2 ,, ,,

கனம். கைலாஸநாத சர்மா
எட்டையாத்தாங்குடி. 2 ,, ,,

கனம். N. S. சுந்தரேச அய்யர்
உதயமார்த் தாண்டபுரம். 2 ,, ,,

கனம். N. V. நாராயணய்யர்
டங்லி. 2 ,, ,,

கனம். எத்திராஜுலு நாயுடு
சிவகிரி. 2 ,, ,,

கனம். V. S. மஹாதேவ அய்யர்
விக்கிர பாண்டியன். 2 ,, ,,

கனம் O. C. P. S. E. பக்கீர்முகையத்
தீன் ராவுத்தர், மதுரை. 2 ,, ,,

கனம். a. R. சுப்பிரமணிய அய்யர்
தாழக்குடி. 2 ,, ,,

கனம். M. சங்கர அய்யர்
ராதாபுரம். 2 ,, ,,

கனம். a. இரத்தின வேலு செட்டியார்
மதருஸ். 2 ,, ,,

கனம். M. S. வெங்கட ராமய்யர்
மேலமங்கலம். 2 ,, ,,

கனம். S. முத்து குமாரஸ்வாமி பிள்ளை
கூத்துபாட்டர் தோப்பு. 2 ,, ,,

கனம். M. S. V. உலகநாதப் பிள்ளை
தேவகோட்டை. 2 ,, ,,

கனம். a. J. சுப்பிரமணிய ராஜு
பெருமாளகரம். 2 ,, ,,

கனம். S. கிருஷ்ண அய்யர்
பெருமாளகரம். 2 ,, ,,

கனம். R. N. சிவசூரிய பிள்ளை
ராதாபுரம். 2 ,, ,,

கனம். தே. வே. சாமியார் என்கிற வாலாம்
பிக்ஷைதாச சுவாமிகள், பேரளம் 2 ,, ,,

இப்போதினியானது முன்பணங் கொடுத்தவர்களுக்கன்றி மற்றவர்களுக்கனுப்பப்படாது எனக்கண்டிப்பான விதி ஏற்பட்டிருப்பதால் பாரபக்ஷமின்றி ஒருவருக்கு முன்பணமில்லாமல் அனுப்புவது மேற்படி ஏற்பாட்டிற்கு விரோதமாகும். ஆகையால்; சிலகனவான்களின் விருப்பப்படி பத்திரிகையனுப்பப்படவில்லை. ஆகையால் அந்தக் கனவான்கள் இப்போதினியைப் பெற்றுக்கொள்ள இஷ்டமிருந்தால், முன்பணமனுப்பத் தயவு செய்வார்களெனக் கேட்டுக்கொள்ளப்படுகிறது.